# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2007 / 2008
## HELD IN AUGUST – 2008

## ECS 2.21 – INTERMEDIATE MACRO ECONOMICS

**எவையேனும் ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.**

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

---

01. "நவீன பேரினப் பொருளியல் சிந்தனை வளர்ச்சிக்கான கெயின்சிய பங்களிப்பில் அவரது நுகர்வுத் தொழிற்பாடு முக்கிய பங்கினை வகிக்கின்றது". இக்கூற்றைப் பரீசீலனை செய்க.

(20 புள்ளிகள்)

02. (அ) பின்வரும் தரவுகள் ஒரு திறந்த பொருளாதாரத்தின் தேசிய வருமானம் பற்றியனவாகும். இத்தரவுகளைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

| | | |
|---|---|---|
| $Y_{1990} = 400$ | $I = 60$ | நேர்வரி $= 20$ |
| $Y_{1991} = 500$ | $G = 50$ | |
| $Y_{1990} = 300$ | $X = 80$ | |
| $Y_{1991} = 375$ | $M = 60$ | |

தரவுகள் மில்லியன் ரூபாக்களில் தரப்பட்டுள்ளன.

i. நுகர்வுச் சமன்பாடு (02 புள்ளிகள்)

ii. சேமிப்புச் சமன்பாடு (01 புள்ளிகள்)

iii. முதலீட்டுப் பெருக்கி (01 புள்ளிகள்)

iv. சமநிலைத் தேசிய வருமானம் (03 புள்ளிகள்)

v. அரச செலவுகள் 80 மில்லியன் ஆக அதிகரிப்பதால் புதிய சமநிலைத் தேசிய வருமானம். (02 புள்ளிகள்)

vi. அரச செலவீட்டுப் பெருக்கி (01 புள்ளிகள்)

(ஆ) வீக்க இடைவெளி, சுருக்க இடைவெளி என்ற எண்ணக்கருக்களை வேறுபடுத்துக.

(06 புள்ளிகள்)

(இ) ஒரு பொருளாதாரத்தில் ஏற்படும் சுருக்க இடைவெளியை நீக்குவதற்கு நீர் கூறும் விதந்துரைகள் யாவை?

(04 புள்ளிகள்)

03. பிஷரது பணக்கணியக் கோட்பாட்டை விளக்கி, அக்கோட்பாட்டிலுள்ள குறைபாடுகளை எடுத்துக் காட்டுக.

(20 புள்ளிகள்)

04. கெயின்சிற்குப் பிற்பட்ட நுகர்வுத் தொழிற்பாட்டில் 'வாழ்க்கை வட்டக் கருதுகோள்' 'நிரந்தர வருமானக் கருதுகோள்' என்பவற்றின் முக்கித்துவத்தினை மதிப்பிடுக.

(20 புள்ளிகள்)

05. (அ) ஒரு LM வளை கோட்டை எவ்வாறு பெற்றுக் கொள்வீர் எனக் காட்டுக.

(08 புள்ளிகள்)

(ஆ) ஒரு IS வளை கோட்டை எவ்வாறு பெற்றுக் கொள்வீர் எனக் காட்டுக.

(08 புள்ளிகள்)

(இ) IS – LM சமநிலை என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது.

(04 புள்ளிகள்)

06. (அ) வேலையின்மை தொடர்பான பின்வரும் எண்ணக் கருக்களைச் சுருக்கமாக விளக்குக.

i. மறைமுக வேலையின்மை

ii. தன்விருப்பு வேலையின்மை

iii. உராய்வு வேலையின்மை

iv. பருவகால வேலையின்மை

v. நிரந்தர வேலையின்மை

vi. தற்காலிக வேலையின்மை

(12 புள்ளிகள்)

(ஆ) நிறை தொழில்மட்டம், வேலையின்மை என்பவை தொடர்பான பழம் பொருளியலாளர்களின் கருத்துக்களை எடுத்துக் காட்டுக.

(08 புள்ளிகள்)

07. (அ) நாணயவாதத்தின் அடிப்படைக் கருத்துக்களை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) கடந்த இரு தசாப்தங்களில் இலங்கையின் பொருளாதாரத்தில் நாணய நடைமுறைக் கொள்கைப் பிரயோகங்களின் செயற்றிறனை மதிப்பீடு செய்க.

(10 புள்ளிகள்)

08. (அ) 'கேள்வித் தூண்டால் பணவீக்கம்' 'செலவுத்தூண்டல் பணவீக்கம்' என்ற எண்ணக்கருக்களை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) 1990 களிலிருந்து இலங்கையின் பணவீக்கத்துக்குப் பங்களிப்புச் செய்த காரணிகளை அடையாளப் படுத்துக.

(10 புள்ளிகள்)

*****